## கொடைக்கானல் நகராட்சி

2019ம் ஆண்டு ஜூன் மாதம் 26ம் நாள் (26.06.2019) புதன்கிழமை பிற்பகல் 4.00 மணிக்கு கொடைக்கானல் நகராட்சி நகர்மன்றக் கூடத்தில் தனி அலுவலர் தலைமையில் நடைபெறும் அவசரக் கூட்டம்.

முன்னிலை: ரா.முருகேசன், எம்.ஏ., எம்.பில்., பி.எல்., டி.பி.எம்.,
தனி அலுவலர்.

1) நகராட்சி நிர்வாக ஆணையரிடமிருந்து வரப்பெற்றுள்ள கடிதம் ந.க.எண். 48800/2006/எல் நாள்.20.06.2019ல், தமிழ்நாடு நகராட்சி கணக்குப்பணி என்ற பணியமைப்பின் கீழ் புதிய பணியிடங்களை உருவாக்குவது தொடர்பாகவும், அதற்கு ஈடாக சில பணியிடங்களை திரும்ப ஒப்படைப்பது தொடர்பாகவும் விபரங்கள் தரப்பட்டுள்ளன.

நகராட்சிகளின் கணக்குகளை இன்றைய தேவைக்கேற்ப பராமரிக்கவும், நிதி மேலாண்மையை திறம்படுத்தவும், **தமிழ்நாடு நகராட்சி கணக்குப்பணி** என்ற பணியமைப்பு உருவாக்கப்படும் என மாண்புமிகு தமிழக முதலமைச்சரவர்கள் 1.04.2013 அன்று சட்ட மன்றத்தில் அறிவித்தார் என்றும், தமிழ்நாடு நகராட்சி கணக்குப் பணி உருவாக்குவதற்கான தீர்மானங்களை அனைத்து நகராட்சிகளும் நிறைவேற்றி நகராட்சி நிர்வாக ஆணையரகத்திற்கு அனுப்பி வைத்துள்ளன என்றும், அத்தீர்மானஙகள் 13.06.2013 அன்று அரசுக்கு அனுப்பிவைக்கப்பட்டன என்றும், இதனடிப்படையில் அரசாணை (எம்எஸ்) எண் 26, நகராட்சி நிர்வாக (ம) குடிநீர் வழஙகல் துறை (எம் இ1) நாள்.10.02.2016ல் தமிழ்நாடு நகராட்சி கணக்குப் பணியமைப்பிற்கான பணி விதிகள் (Tamil Nadu Municipal Accounts Service Rules) 2016 உருவாக்கப்பட்டு 11.02.2016 அன்று அரசு கெஜட்டில் வெளியிடப்பட்டது என்றும், நகராட்சி நிர்வாக ஆணையரிடமிருந்து வரப்பெற்றுள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2) மேலும், தமிழ்நாடு நகராட்சி கணக்குப் பணியமைப்பின் கீழ் பணியிடங்களை புதிதாக உருவாக்க ஏதுவாக செம்பாக்கம், வாலாஜாப்பேட்டை, வந்தவாசி மற்றும் கீழக்கரை நகராட்சிகள் தவிர அனைத்து நகராட்சிகளும் தலா ஒரு இளநிலை உதவியாளர் பணியிடத்தை திரும்ப ஒப்படைத்து (Surrender) தீர்மானம் நிறைவேற்றி நகராட்சி நிர்வாக ஆணையரகத்திற்கு அனுப்பி வைத்தன என்றும் அத்தீர்மானஙகள் 07.07.2017 அன்று அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டன என்றும் அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

3) தற்போது தமிழ்நாடு நகராட்சி கணக்குப் பணியின் (Tamil Nadu Municipal Accounts Service) கீழ் கொடைக்கானல் நகராட்சிக்கு கீழ்கண்டவாறு புதிய பணியிடங்கள் உருவாக்கிட திருத்திய கருத்துரு அரசுக்கு 03.01.2019 அன்று அனுப்பப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| முதுநிலை கணக்கர் | Senior Accountant | 1 |
| கணக்கு உதவியாளர் | Accounts Assistant | 1 |

மேற்கண்டவாறு Tamil Nadu Municipal Accounts Service பணியமைப்பில் கணக்குப் பணிக்கான பிரத்யேக பணியிடங்களை உருவாக்குவதற்கு ஈடாக ஏற்கனவே தமிழ்நாடு நகராட்சி பொதுப்பணியில் (Tamil Nadu Municipal General Service) கணக்கு பணி தொடர்பாக உருவாக்கப்பட்டுள்ள பணியிடம் / பணியிடங்களையோ அல்லது வேறு பணியிடத்தையோ ஒவ்வொரு நகராட்சியும் கூடுதல் சம்பள செலவினை தவிர்க்கும் பொருட்டு திரும்ப ஒப்படைக்க வேண்டியுள்ளது என்றும் நகராட்சி நிர்வாக ஆணையர் தெரிவித்துள்ளார். இந்நகராட்சியில் கீழ்காணும் பணியிடத்தினை திரும்ப ஒப்படைக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

Class II கணக்கர் பணியிடம் ஒன்று மட்டும்

அலுவலக குறிப்பு — மன்றம் அனுமதி வழங்கலாம்.
(ந.க.எண்.1954/2017/சி1)

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **616, நாள். 26.06.2019.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அனுமதிக்கப்படுகிறது.** |

*******

2) மாவட்ட தேர்தல் அலுவலர்/ மாவட்ட ஆட்சித் தலைவர், திண்டுக்கல் மற்றும் கொடைக்கானல் நகராட்சி ஆணையர் அவர்களின் அறிவுரையின்படி அனைத்து வாக்குச் சாவடி மையஙகளிலும் பாராளுமன்ற தேர்தல் 2019 யை முன்னிட்டு குடிநீர் வசதி, மின் வசதி, கழிப்பறை வசதி, சாய்வு தள வசதிகள் அமைத்து கொடுத்திட தெரிவிக்கப்பட்டது.

அதன்படி அனைத்து வாக்குச் சாவடி மையங்களிலும் குடிநீர் வசதிகள் ஏற்படுத்தப்பட்டது. இதில் குடிநீர் தொட்டி இல்லாத மையங்களில் புதியதாக 10 எண்ணம் 1000 லிட்டர் கொள்ளவு கொண்ட பிளாஸ்டிக் தொட்டிகள், 36 எண்ணம் தண்ணீர் குழாய் தொட்டிகள்(Water Bubble), மின் உதிரி பொருட்கள் இந்நகராட்சி பணி ஆய்வர் திரு கு. சரவணன் அவர்களால் வாங்கப்பட்டு அதற்கான செலவினத்திற்கு பட்டியல் இணைத்து செலவினத் தொகையினை தனக்கு வழங்க கோரியுள்ளார்.

| வ.எண். | பொருட்களின் விபரம் | பட்டியல் எண்/நாள் | எண்ணிக்கை | தொகை |
|---|---|---|---|---|
| 1 | 1000 லிட்டர் கொள்ளளவு கொண்ட தண்ணீர் தொட்டி மற்றும் உதிரி பொருட்கள் | 757 நாள். 17.4.2019 | 10 | 125000.00 |
| 2 | 5 லிட்டர் குடிநீர் குழாய் தொட்டிகள் (Water Bubble), | 758 நாள். 17.4.2019 | 36 | 9000.00 |
| 3 | மின் உதிரி பொருட்கள் | 758 நாள். 17.4.2019 | 13 மையங்கள் | 8300.00 |
| | மொத்தம் | | | 1,42,300.00 |

மேற்கண்ட விவரப்படி பட்டியல் தொகை ரூ. 1,42,300/– யை திரு கு. சரவணன், பணி ஆய்வருக்கு வழங்கிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு. 1) அனுமதிக்கலாம்.
2) அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி பட்டியல் தொகை வழங்கியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **617, நாள். 26.06.2019.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அலுவலககுறிப்பு அனுமதிக்கப்படுகிறது.** |

*******

3) கொடைக்கானல் நகராட்சிக்கு சொந்தமான கீழ்க்கண்ட சாலைகள் கடந்த காலங்களில் பெய்த கனமழையின் காரணமாகவும், கீழ்குண்டாறு குடிநீர் குழாய்கள் பதித்ததினாலும் மிகவும் சேதமடைந்து போக்குவரத்திற்கும் பொதுமக்களுக்கும் மிகவும் சிரமாக உள்ளது. இதனால் பொதுமக்களிடம் இருந்து சாலைகளை சீரமைத்திட தெரிவித்து புகார்கள் வந்த வண்ணம் உள்ளன. மேலும் கொடைக்கானல் நகரில் முக்கிய திருவிழாவான புனித சலேத் அன்னை திருவிழா வருகின்ற ஆகஸ்ட் 14 மற்றும் 15 கொண்டாடப்பட உள்ளது. இச்சாலையினையும் உடனடியாக சரி செய்ய வேண்டியது மிகவும் இன்றியமையாததாகும்.

| வ.எண். | பணியின் பெயர் | மதிப்பீடு |
|---|---|---|
| 1 | மூஞ்சிக்கல் சந்திப்பு முதல் ஆனந்தகிரி 4–வது தெரு நகராட்சி குடியிருப்பு வரை பேட்ஜ் ஒர்க் செய்தல் | 9.80 |
| 2 | லாஸ்காட் சாலை சந்திப்பு முதல் ஆனந்தகிரி 4–வது –5வது தெரு சந்திப்பு வரை பேட்ஜ் ஒர்க் செய்தல் | 10.00 |
| 3 | சென்ட் மேரிஸ் சாலை முதல் இருதய ஆண்டவர் கோயில் வரை பேட்ஜ் ஒர்க் செய்தல் | 7.50 |

எனவே, பொதுமக்கள் மற்றும் சுற்றுலா பயணிகளின் நலன் கருதி, மேற்கண்ட சாலைகளை உடனடியாக சரி செய்திட வேண்டியுள்ளதால், பொது நிதியின் கீழ் மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடு மன்றத்தின் பார்வைக்கும், ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு. மேற்கண்ட சாலைகள் பொதுமக்கள் மற்றும் சுற்றுலா பயணிகளின் நலன் கருதி உடனடியாக செய்ய வேண்டியுள்ளதால் மேற்கண்ட பணிகளை பொது நிதியின் மூலம் மேற்கொள்ள அனுமதிக்கலாம்.

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **618, நாள். 26.06.2019.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அனுமதிக்கப்படுகிறது.** |

*******

4) நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு (ME.1) துறையின், 21.09.2011ம் தேதிய அரசாணை (பல்வகை) எண். 145ன்படி, கோயம்புத்தூர், தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனத்திற்கு சிறப்பு நிலை நகராட்சியால் 2018 – 2019 ம் ஆண்டிற்கு செலுத்தப்பட வேண்டிய பங்குத் தொகை ரூ. 1,50,000/–ஐ (ரூபாய் ஒரு லட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) செலுத்தக் கோரி இயக்குநர், தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனம், கோயம்புத்தூர் அவர்களின் ந.க.எண்.848/2018/அ2, நாள்.29.05.2019ல் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட பங்குத் தொகையை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலுத்த மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :– அனுமதிக்கலாம்.

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **619, நாள். 26.06.2019.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அனுமதிக்கப்படுகிறது.** |

*******

5) கொடைக்கானல் நகராட்சி ஆணையாளர், திரு.ரா.முருகேசன் அவர்களின் மார்ச்–2019, ஏப்ரல்–2019 மற்றும் மே–2019 மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : மன்றம் பதிவு செய்யலாம். (ந.க.எண்.632/2018/சி1)

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **620, நாள். 26.06.2019.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அனுமதிக்கப்படுகிறது.** |

*******

6) கொடைக்கானல் நகராட்சிக்கு சொந்தமான பகுதிகளில் உள்ள ஆழ்துளை கிணறுகள் மற்றும் மோட்டார்கள் பழுதடைந்துள்ளன.

1. கல்லுக்குழி ஆள்துளை கிணறு – 1 எண்ணம்
2. ஜிம்கானா ஆழ்துளை கிணறு – 4 எண்ணம்
3. நகராட்சி அலுவலகம் முன்புறம் உள்ள ஆழ்துளை கிணறு – 2 எண்ணம்
4. செண்பகனூர் ஆள்துளை கிணறு சத்தியாநகர்(கொய்யாப்பாறை) – 1 எண்ணம்
5. பில்டிங சொசைட்டி ஆள்துளை கிணறு – 1 எண்ணம்
6. சத்யா நகர் ஆள்துணை கிணறு – 1 எண்ணம்

மேற்கண்ட ஆள்துளை கிணறுகளில் உள்ள மோட்டார்களை பழுது நீக்கம் செய்து பயன்படுத்திட மதிப்பீடு ரூ. 12.50 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டுள்ளது. 2019 ம் ஆண்டு வறட்சி நிவாரண நிதியின் கீழ் கொடைக்கானல் நகராட்சிக்கு 12 பணிகளுக்கு ரூ.20.00 இலட்சம் அரசாணை (நிலை) எண். 125 வருவாய் (ம) இயற்கை இடர்பாடுகள் மேலாண்மை துறை நாள். 28.5.2019 ன் கீழ் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட பணிகளுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள நிதி போக கூடுதல் நிதியினை நகராட்சி நிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு. வறட்சி நிவாரண நிதி 2019 ன் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள நிதி போக மீதத் தொகையினை நகராட்சி பொது நிதியின் மூலம் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **621, நாள். 26.06.2019.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அனுமதிக்கப்படுகிறது.** |

*******

7) கொடைக்கானல் நகரில் மாண்புமிகு அமைச்சர் பெருமக்களால் திண்டுக்கல் மாவட்டம், கொடைக்கானல் கோடைவிழா 2019 மற்றும் 58– வது மலர் கண்காட்சியினை தொடங்கி வைப்பதை முன்னிட்டு துறை மூலம் நிறைவேற்றப்பட்ட வளர்ச்சி பணிகள் குறித்த திட்டநகளை கீழ்க்கண்ட நாளிதழ்களில் விளம்பரமாக வெளியிட மாவட்ட ஆட்சித் தலைவர், திண்டுக்கல் அவர்களின் கடிதம் ந.க.எண். 125/செ.ம.தொ./2019 நாள். 29.5.2019 ல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

1. தினத்தந்தி
2. தினமலர்
3. தினமணி
4. மக்கள் குரல்
5. தினச்சூரியன்
6. மதுரை மணி

அதன்படி, கொடைக்கானல் நகராட்சியின் வளர்ச்சி பணிகளை நாளிதழ்களில் வெளியிட்ட வகையில் கீழ்க்கண்டவாறு பட்டியல் பெறப்பட்டுள்ளது.

| வ.எண். | நாளிதழின் பெயர் | பட்டியல் எண் /நாள் | தொகை ரூ. |
|---|---|---|---|
| 1 | தினத்தந்தி | DGL 19200002409 dt 30.5.2019 | 43313/– |
| 2 | தினமலர் | Prabu Arts,Palani 483 dt 30.5.2019 | 38981/– |
| 3 | தினமணி | Express Publications (Madurai) P ltd., MDU TN 30056725 dated 31/5/2019 | 40000/- |
| 4 | மக்கள் குரல் | MD111o dated 1.6.2019 | 35700/– |
| 5 | தினச்சூரியன் | 1021 dated 30.5.2019 | 34125/– |
| 6 | மதுரை மணி | 183 dt 31.5.2019 | 32432/- |

பட்டியலின்படி தொகையினை நாளிதழ் நிறுவனங்களுக்கு வழஙகிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு. அனுமதிக்கலாம்.

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **622, நாள். 26.06.2019.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அனுமதிக்கப்படுகிறது.** |

*******

8) கொடைக்கானல் நகராட்சிக்கு சொந்தமான அம்பேத்கார் நகர் பகுதிக்கு குடிநீர் விநியோகம் செய்யும் லாயிட்ஸ் சாலையில் அமைந்துள்ள திறந்த வெளி கிணற்றில் உள்ள 7.5 எச்.பி. மின் மோட்டார் பழுதுடைந்துள்ளதால், இப்பகுதியில் குடிநீர் விநியோகம் பாதிக்கப்பட்டுள்ளது. எனவே, குடிநீர் தேவையினை கருத்தில் கொண்டு புதிய 7.5 எச்.பி. மின் மோட்டார் மற்றும் உதிரி பொருட்கள் வாங்கி பொருத்திட மதிப்பீடு ரூ. 1.38 இலட்சத்திற்கு ( ரூபாய் ஒரு இலட்சத்து முப்பத்து எட்டாயிரம் மட்டும் ) மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டின்படி ஒப்பந்தப்புள்ளி கோரி பணியினை மேற்கொள்ளவும், குடிநீர் நிதியின் கீழ் செலவினம் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு. அனுமதிக்கலாம்.

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **623, நாள். 26.06.2019.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அனுமதிக்கப்படுகிறது.** |

*******

9) பாராளுமன்ற தேர்தல் 2019 தொடர்பான விழிப்புணர்வை பொதுமக்கள் மத்தியில் ஏற்படுத்தும் வகையில் விளம்பர பலகைகள், போஸ்டர்கள் மற்றும் ஸ்டிக்கர்கள் பொது இடங்களில் பொது மக்கள் பார்வைக்கு நிறுவிய வகையில் செலவினத் தொகை ரூ. 63648/–யை நகராட்சி பொதுநிதியின் மூலம் மேற்கொள்ள மாவட்ட ஆட்சித் தலைவர், திண்டுக்கல் அவர்களின் கடிதம் ந.க.எண். 60/செ.ம.தொ.அ./2019 நாள். 14.03.2019 ல் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி, மாவட்ட ஆட்சியரகத்தினரால் City Computer Offset Printers, Dindigul நிறுவனத்தின் மூலம் விளம்பர பலகைகள் அமைக்கப்பட்ட வகையில் பட்டியல் பெறப்பட்டுள்ளது. ( பட்டியல் எண். CC/S/18-19/538 dated 30.3.2019) எனவே, பட்டியலின்படி தொகை ரூ. 63648/– யை City Computer Offset Printers, Didigul நிறுவனத்திற்கு வழஙகிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு. அனுமதிக்கலாம். மேற்படி செலவினத்தினை நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்எலாம். (ந.க.எண்.2381/2019/இ1)

| நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் : | 624, நாள். 26.06.2019. |
|---|---|
| | |
| நகர் மன்ற தீர்மானம் : | அனுமதிக்கப்படுகிறது. |

*******

10) கொடைக்கானல் நகராட்சியின் பொலிரோ வாகனம் TN 57 AS 0817 வாகனம் இதுவரை 1,41,000 கி.மீட்டருக்கு மேல் ஓடியுள்ளது. எனவே, இவ்வாகனத்தின் ஆயில் சர்வீஸ் மற்றும் இதர மராமத்து சர்வீஸ் பணிகளை மதுரை TVS பணிமனையில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. இதற்காகும் உத்தேச செலவுத் தொகை ரூ.. 20,000/– (ரூபாய் இருபதாயிரம் மட்டும்) ஆகும்.

அலுவலக குறிப்பு. அனுமதிக்கலாம். ( கோப்பு ந.க.எண். 333/2013/இ1)

| நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் : | 625, நாள். 26.06.2019. |
|---|---|
| | |
| நகர் மன்ற தீர்மானம் : | அனுமதிக்கப்படுகிறது. |

*******

11) கொடைக்கானல் நகராட்சிக்கு சொந்தமான கார்மேல்புரம் பகுதியில் உள்ள சாலை மற்றும் சிறுபாலம் கடந்த காலஙகளில் பெய்த கனமழை மற்றும் புயலினால் மிகவும் சேதமடைந்து பொதுமக்கள் பயன்படுத்த இயலாத சூழ்நிலையில் உள்ளது. எனவே, இப்பகுதி பொதுமக்களின் அடிப்படை வசதியினை மேம்படுத்தும் பொருட்டு கார்மேல்புரம் பகுதியில் சிமிண்ட் சாலை மற்றும் சிறு பாலம் அமைப்பதற்கு பொதுநிதியின் கீழ் மதிப்பீடு ரூ. 10.00 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடு மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு. அனுமதிக்கலாம்.

| நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் : | 626, நாள். 26.06.2019. |
|---|---|
| | |
| நகர் மன்ற தீர்மானம் : | அனுமதிக்கப்படுகிறது. |

*******

12) உதவி இயக்குநர், உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை, திண்டுக்கல் அவர்களின் கடிதம் ந.க.எண்.6/அ1, நாள்.18.02.2019ன்படி, வரப்பெற்றுள்ள 2017–18ம் ஆண்டு வருவாய் மற்றும் மூலதன நிதி தணிக்கை அறிக்கை பத்தி எண்.47ல் குறிப்பிட்டுள்ளபடி, அரசாணை எண்.62, உள்ளாட்சி துறை, நாள்.12.01.1994ன்படி 2017–18ம் ஆண்டிற்கான வருவாய் மற்றும் மூலதனநிதி, குடிநீர் வழஙகல் நிதி மற்றும் கல்வி நிதிக்கான தணிக்கை கட்டணம் ரூ.2,72,596/– (ரூபாய் இரண்டு இலட்சத்து எழுபத்து இரண்டாயிரத்து ஐநூற்று தொன்னூற்று ஆறு மட்டும்) அரசு தலைப்பில் செலுத்த கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

மேற்படி விபரத்திற்கு 2017–18ம் ஆண்டிற்கான தணிக்கை கட்டணம் ரூ.2,72,596/–ஐ இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்வதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.580/2006/C2)

| நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் : | 627, நாள். 26.06.2019. |
|---|---|
| | |
| நகர் மன்ற தீர்மானம் : | அனுமதிக்கப்படுகிறது. |

*******

13) இந்நகராட்சி இயற்கை எழில்மிகு மலைகளின் இளவரசி என வர்ணிக்கப்படும் சர்வதேச சுற்றுலாத் தலமாகும். இந்நகராட்சியில் பல்வேறு திட்டப்பணிகள் பொது மக்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகளுக்காக மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இங்கு நாள் ஒன்றுக்கு சுமார் 10000 சுற்றுலாப் பயணிகள் வந்து செல்கின்றனர்.

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை எண்.143, நாள்.31.05.1994ன்படி, கொடைக்கானல் நகராட்சி சிறப்பு நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டு செயல்பட்டு வருகிறது. இந்நகராட்சிக்கு சிறப்பு நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்ட போதும், பணியிடங்களை பொருத்தவரை இரண்டாம் நிலை நகராட்சிக்கான பணியிடங்கள் மட்டுமே பணியமர்த்தப்பட்டு பணி செய்து வருகிறார்கள். வருவாய் நிதியில் இந்நகராட்சி பணியாளர் ஊதியம் மற்றும் ஓய்வூதியம் 49 சதவீதத்திற்கு மிகாமல் உள்ளது.

எனவே, நகராட்சிகளின் நிர்வாக ஆணையாளர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.4314/2088/எச்.1, நாள்.14.10.2008ல் அறிவுறுத்தியதற்கிணங்க கீழ்காணும் பணியிடங்கள் தோற்றுவிக்க தகுதியுடையதாகும்.

| வ. எண் | பதவியின் பெயர் | சிறப்பு நிலை நகராட்சிக்கு தோற்றுவிக்கப்பட வேண்டியது | தற்போதுள்ள பணியிடம் | இந்நகராட்சிக்கு தேவைப்படும் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 1 | செயற்பொறியாளர்(வகுப்பு–1) | 1 | 0 | 1 |
| 2 | முதுநிலை நகரமைப்பு அலுவலர்(வகுப்பு–1) | 1 | 0 | 1 |
| 3 | உதவி வருவாய் அலுவலர் (வகுப்பு –1A) | 2 | 0 | 2 |
| 4 | வருவாய் அலுவலர் (வகுப்பு –2) | 1 | 0 | 1 |
| 5 | நகரமைப்பு ஆய்வாளர் | 2 | 1 | 1 |
| 6 | இளநிலை பொறியாளர் | 8 | 1 | 7 |
| 7 | உதவியாளர் (வகுப்பு–5) | 4 | 1 | 3 |
| 8 | இளநிலை உதவியாளர் | 16 | 10 | 6 |
| 9 | வருவாய் உதவியாளர் | 4 | 3 | 1 |
| 10 | தட்டச்சர் | 4 | 1 | 3 |
| 11 | புள்ளி விபர குறிப்பாளர் | 4 | 1 | 3 |
| 13 | பணி ஆய்வாளர் | 8 | 2 | 6 |

சிறப்புநிலை நகராட்சியின் தரத்திற்கு ஏற்றவாறு, மேற்காணும் புதிய பணியிடங்கள் தோற்றுவிக்கப்பட வேண்டுமென ஏற்கனவே உத்தரவிடப்பட்டுள்ளதால், அதனடிப்படையில், இந்நகராட்சியின் எதிர்கால நிர்வாக நலன்கருதி சிறப்பு நிலைக்கான உரிய பணியிடங்கள் தோற்றுவிக்க நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநருக்கு பிரேரணை அனுப்பி வைக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு – அனுமதிக்கலாம்.

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **628, நாள். 26.06.2019.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அனுமதிக்கப்படுகிறது.** |

*******

14) கொடைக்கானல் நகராட்சி பகுதியில் உள்ள ஆள்துளை கிணறுகளில் உள்ள மோட்டார்களை பழுது நீக்கம் மற்றும் ஆள்துளை கிணறு பழுதுகளை சரி செய்திட மதிப்பீடு ரூ. 12.50 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டுள்ளது. இதில் ரூ. 10.00 இலட்சம் மதிப்பீட்டில் ஆள்துளை கிணறுகள் மற்றும் மின் மோட்டார்களை பழுது நீக்கம் செய்திட 2019 ம் ஆண்டு வறட்சி நிவாரண நிதியின் கீழ் கொடைக்கானல் நகராட்சிக் அரசாணை (நிலை) எண். 125 வருவாய் (ம) இயற்கை இடர்பாடுகள் மேலாண்மை துறை நாள். 28.5.2019 ன் கீழ் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதன்படி இப்பணிகளை மேற்கொள்ள குறுகிய கால ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளன. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்பீட்டு அட்டவணை மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | வேலையின் பெயர் | மதிப்பீடு இலட்சத்தில் | ஒப்பந்தக்காரரின் பெயர் (திருவாளர்கள்) | ஒப்பந்த சதவீதம் (மதிப்பீடு விகிதத்திற்கு ) |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| வறட்சி நிவாரண நிதி 2019–2020 | | | | |
| 1 | கொடைக்கானல் நகராட்சிக்கு சொந்தமான கீழ்க்கண்ட இடங்களில் உள்ள ஆழ்துளை கிணறுகளை சரி செய்து மின் மோட்டார் பழுது நீக்கி பொருத்துதல்.<br>ஜிம்கானா ஆழ்துளை கிணறு –4 எண்ணம்<br>நகராட்சி அலுவலகம் முன்புறம் | 10.00 | திருமதி கோகிலா ராணி<br><br>திருமதி சரஸ்வதி | மதிப்பீட்டு விகிதம்<br><br>5.45% அதிகம் |

| | | | | |
|---|---|---|---|---|
| | உள்ள ஆழ்துளை கிணறு –2எண்ணம்<br>செண்பகனுார் ஆள்துளைகிணறு<br>சத்தியாநகர் (கொய்யாப்பாறை) –1 எண்ணம்<br>பில்டிங சொசைட்டி ஆள்துளை கிணறு– 1 எண்ணம் | | | |
| 2 | கொடைக்கானல் நகராட்சிக்கு சொந்தமான கீழ்க்கண்ட இடஙகளில் உள்ள ஆழ்துளை கிணறுகளை சரி செய்து மின் மோட்டார் பழுது நீக்கி பொருத்துதல்.<br>கல்லுக்குழி ஆள்துளை கிணறு –1 எண்ணம்<br>சத்யா நகர் (அய்யர்கிணறு)<br>ஆள்துளை கிணறு – 1 எண்ணம் | 2.50 | திருமதி சரஸ்வதி<br><br>திருமதி கோகிலா ராணி | மதிப்பீட்டு விகிதம்<br><br>4.55% அதிகம் |

அலுவலக குறிப்பு. 1. குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்

2. குடிநீர் தேவையினை கருத்தில் கொண்டு அவசர அவசியமாக இப்பணியினை மேற்கொள்ள வேண்டியுள்ளதால், குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரர்களுக்கு மன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி பணி உத்திரவு வழஙகியதையும் மன்றம் அஙகீகரிக்கலாம்.

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **629, நாள். 26.06.2019.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அங்கீகரிக்கப்படுகிறது.** |

*******

15) கொடைக்கானல் நகராட்சிக்கு சொந்தமான வெள்ளி நீர் வீழ்ச்சி பகுதி மற்றும் பூங்கா பகுதியினை சுற்றுலா பயணிகள் பயன்படுத்தும் வகையில் நடைபாதை அமைத்தல், பூந்தோட்டம் உருவாக்குதல் மற்றும் அழங்கார கம்பி வேலி அமைத்திட மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் அறிவுறுத்தியதின்படி, கீழ்க்கண்ட பணிகள் மேற்கொள்வதற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது.

| வ. எண் | பணியின் விபரம் | மதிப்பீடு ரூ. இலட்சத்தில் |
|---|---|---|
| 1. | வெள்ளி நீர் வீழ்ச்சி மற்றும் பூங்காவை மேம்படுத்துதல். | 9.50 |
| 2. | வெள்ளி நீர் வீழ்ச்சி பூங்காவின் அழகு தோற்றம் மற்றும் பூந்தோட்டம் அமைத்தல். | 6.50 |
| 3. | வெள்ளி நீர் வீழ்ச்சியில் அலங்கார மின் விளக்குகள் மற்றும் வர்ணம் பூசுதல். | 10.00 |

மேற்கண்ட பணிகளை பொது நிதியின் கீழ் மேற்கொள்வதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு – அனுமதிக்கலாம்.

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **630, நாள். 26.06.2019.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அனுமதிக்கப்படுகிறது.** |

*******

16) கொடைக்கானல் நகராட்சி அலுவலகத்தில் உள்ள ஜெராக்ஸ் இயந்திரம் பழுதடைந்து பயன்படுத்த இயலாத நிலையில் உள்ளது. இதனால் அலுவலக பயன்பாட்டிற்கு நகல் எடுக்க தனியார் நிறுவனங்களுக்கு செல்ல வேண்டியுள்ளது. மேலும், பொறியியல் பிரிவில் கணினி பிரிண்டர் கடந்த 15 ஆண்டுகளுக்கு முன்னர் வாங்கப்பட்டது ஆகும். இது நாள் வரை பயன்பாட்டில் இருந்த பிரிண்டர் தற்போது பழுதடைந்துள்ளது. எனவே, பழைய இயந்திரங்களை கழிவு செய்து, புதியதாக அலுவலக பயன்பாட்டிற்கு கீழ்க்கண்ட பொருட்களை அரசு நிர்ணய விலையில் Government e-Market Place (GEM) பதிவு செய்து வாங்கிக் கொள்ளவும் அதற்கான செலவினத்தினை பொது நிதியின் மூலம் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. இதற்காகும் உத்தேச செலவுத் தொகை ரூ.2.50 இலட்சம் ஆகும்.

| S.No. | Items | Qty |
|---|---|---|
| 1. | Xerox Machine | 1 No |
| 2. | HP Laser Printer (for Engg section) | 2 Nos |

அலுவலக குறிப்பு – அனுமதிக்கலாம்.

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **631, நாள். 26.06.2019.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அனுமதிக்கப்படுகிறது.** |

*******

17) கொடைக்கானல் நகராட்சி பொறியியல் பிரிவு 2019–20ஆம் ஆண்டிற்கு புதிய குடிநீர் குழாய் இணைப்பு வழங்குவதற்கு Internal Plumbing Charge நிர்ணயம் செய்யும் பொருட்டு 2018–19ம் ஆண்டு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் தர விலைப்பட்டியலை கொண்டு கீழ்கண்டவாறு அட்டவணை தயார் செய்யப்பட்டுள்ளது.

1) 0–30மீ நீளம், 15mm GI Pipe க்கு இணைப்பு பணி, பணியாளர் செலவு விபரம்:-

| Sl. No | Rm No | Spears and works | Rate | Per | Total Rs. |
|---|---|---|---|---|---|
| 1. | 30Rm | Laying and jointing 15mm GI Pipe | 13.16 | 1Rm | 395 |
| 2. | 8 Nos | 15mm Pipe cutting | 5.43 | Each | 45 |
| 3. | 15Nos | 15mm Pipe threading | 7.66 | Each | 115 |
| 4. | 1No | Fixing specials line ferule main cock, SD cocks and union. | 70.70 | Each | 71 |
| 5. | 1No | Fixing meter | 150 | Each | 150 |
| 6. | 30Rm | Refilling Charges | 17.47 | 1Rm | 525 |
| 7. | 1No | Estimate Charge | 100 | Each | 100 |
| 8. | 1No | Exposing main in street boring main threading fixing, ferule with piece pipe to the service main & testing | | Each | 85 |
| | | | | | 1486 |

2) 30–90மீ நீளம், 20mm GI Pipe க்கு இணைப்பு பணி, பணியாளர் செலவு விபரம்:-

| Sl. No | Rm / No | Spears and works | Rate | Per | Total Rs. |
|---|---|---|---|---|---|
| 1. | 90Rm | Laying and jointing 20mm GI Pipe | 13.16 | 1Rm | 1185 |
| 2. | 10Nos | 20mm Pipe cutting | 5.43 | Each | 55 |
| 3. | 19Nos | 20mm Pipe threading | 7.89 | Each | 150 |
| 4. | 1No | Fixing specials line ferule main cock, SD cocks and union. | 88.77 | Each | 90 |
| 5. | 1No | Fixing meter | 200 | Each | 200 |
| 6. | 90Rm | Refilling Charges | 17.47 | 1Rm | 1575 |
| 7. | 1No | Estimate Charge | 100 | Each | 100 |
| 8. | 1No | Exposing main in street boring main threading fixing, ferule with piece pipe to the service main & testing | 170 | Each | 170 |
| | | | | | 3525 |

மேற்காணும் அட்டவணைப்படி 2019–2020ஆம் ஆண்டிற்கு புதிய குடிநீர் குழாய் இணைப்பு வழங்குவதற்கு Internal Plumbing Charge நிர்ணயம் செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு – மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.639/2003/இ2)

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **632, நாள். 26.06.2019.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அனுமதிக்கப்படுகிறது.** |

ஒம்/—ரா.முருகேசன்,
தனி அலுவலர்,
கொடைக்கானல் நகராட்சி.

/உண்மை நகல்/

ஆணையாளர்,
கொடைக்கானல் நகராட்சி.